ISSN: 2582–5518





புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARU.COM VARALARU PUDUGAIVARALARU VARALARU 7502051351





சனி ❖ ஜூலை. 22, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 288 ❖ ரூ.10

### செந்தில் பாலாஜி எந்த சட்டப் பிரிவின் கீழ் தகுதி இழப்பு ஆகிறார்?

# கேள்வி

## அமைச்சராக நியமித்த தமிழக அரசின் அரசாணையை ரத்து செய்யக் கோரி தொடரப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றம் கேள்வி



சென்னை, ஜூலை.22–

'இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவாக தண்டனை பெற்றவர் பதவியில் நீடிக்கலாம் எனும்போது, எந்த சட்டப் பிரிவின் கீழ் செந்தில் பாலாஜி தகுதி இழப்பு ஆகிறார்?' என்று அவரை அமைச்சராக நியமித்த தமிழக அரசின் அரசாணையை ரத்து செய்யக் கோரி தொடரப்பட்ட வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

சட்ட விரோத பணப்பரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ள செந்தில்பாலாஜி வசம் இருந்த துறைகள் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, முத்துசாமி ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டன. செந்தில் பாலாஜியை இலாகா இல்லாத அமைச்சராக தொடர ஆளுநர் அனுமதி மறுத்த நிலையில், இலாகா இல்லாத அமைச்சராக செந்தில்பாலாஜி நீடிப்பார் என கடந்த ஜூன் 16-ம் தேதி தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

இந்த அரசாணையை ரத்து செய்யக்கோரி வழக்கறிஞரும், தேசிய மக்கள் கட்சியின் தலைவருமான எம்.எல்.ரவி மனு தாக்கல் செய்திருந்தார். அதேபோல, செந்தில் பாலாஜி எந்த தகுதியின் அடிப்படையில் அமைச்சராக நீடிக்கிறார் என விளக்கம் கேட்க உத்தரவிடக் கோரி கொளத்தூரை சேர்ந்த எஸ்.ராமகிருஷ்ணன், அதிமுக முன்னாள் எம்.பி. ஜெ.ஜெயவர்த்தன் ஆகியோர் ரிட் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

மேலும், அமைச்சர் செந்தில் பாலாஜியை நீக்கம் செய்வதாக ஜூன் 29-ம் தேதி மாலையில் உத்தரவு பிறப்பித்த ஆளுநர், அடுத்த சில மணி நேரங்களில் அந்த உத்தரவை நிறுத்திவைப்பதாக எடுத்த முடிவை ரத்து செய்யக் கோரி எம்.எல்.ரவி மற்றொரு வழக்கையும் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்குகள் தலைமை நீதிபதி எஸ்.வி.கங்கபுர்வாலா மற்றும் நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது ஜெயவர்த்தன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் வி.ராகவாச்சாரி, "செந்தில் பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராக நீடிக்கும் அதிகாரத்தை இழந்து விட்டார். அரசு ஊழியர்கள் 48 மணி நேரம் காவலில் இருந்தாலே அவர்கள் பதவியில் நீடிக்கும் தகுதியை இழந்து விடுகின்றனர். ஒரு மாதத்துக்கு மேல் காவலில் உள்ள செந்தில் பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராக எப்படி நீடிக்க முடியும்?" என வாதிட்டார்.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி கங்கபுர்வாலா, 'இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவாக தண்டனை பெற்றவர் பதவியில் நீடிக்கலாம் எனும்போது, எந்த சட்டப் பிரிவின் கீழ் செந்தில் பாலாஜி தகுதி இழப்பு ஆகிறார்?' என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த மூத்த வழக்கறிஞர், 'எம்எல்ஏவாக அவர் நீடிக்கலாம். ஆனால் எந்த துறையும் இல்லாமல் அமைச்சராக நீடிக்க முடியாது. மணீஷ் சிசோடியா, சத்யேந்திர ஜெயின் ஆகியோர் அமைச்சர்களாக நீடிக்கவில்லை. சிறையில் இருப்பவர் அமைச்சராக நீடிக்க தகுதியில்லை என்ற வழக்கு இதுவே தான் முதல்முறை. இதுபோன்ற வழக்கு வேறு எந்த நீதிமன்றத்திலும் விசாரிக்கப்படவில்லை.

இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவு 163, ஆளுநருக்கு வழங்கியுள்ள அதிகாரத்தின்படி, செந்தில்பாலாஜி பதவியில் நீடிப்பதை ஏற்க முடியாது என ஆளுனர் கூறியிருக்கிறார். அமைச்சராக நீடிக்க தகுதியில்லை என அறிவிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரம் உள்ளது. வழக்கு விசாரணையில் அவர் தலையிட வாய்ப்புள்ளது எனும் அச்சம் உள்ளதால், முதல்வரே அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும்' என ஜெயவர்த்தன் தரப்பில் வாதிடப்பட்டது.

எம்.எல்.ரவி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சக்திவேல், 'செந்தில் பாலாஜியைநீக்கியஉத்தரவை ஆளுநர் நிறுத்தி வைக்க முடியாது. நீக்கத்துக்கும், அதை நிறுத்தி வைத்ததற்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் எந்த பதவியிலும் இல்லை. அவருக்கு மீண்டும் பதவிப்பிரமாணமும் செய்து வைக்கப்படவில்லை' என்று வாதிட்டார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், அரசுத் தரப்பு பதில் வாதத்துக்காக வழக்கு விசாரணையை அடுத்த வாரத்துக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு திரையரங்கம் மற்றும் மல்டிபிளக்ஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஆர். மூர்த்தி, தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவர் முரளி என். இராமசாமி, செயலாளர்கள் எஸ். கதிரேசன் மற்றும் ஆர். ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு திரையரங்கம் மற்றும் மல்டிபிளக்ஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் வி.டி.எல். சுப்பு, செயற்குழு உறுப்பினர் டி.என்.டி. ராஜா, பொருளாளர் சந்திரபிரகாஷ் ஜெயின், தமிழ்நாடு திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் அருள்பதி, துணைத் தலைவர் கே. ராஜன் ஆகியோர் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார்கள். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### ஆவுடையார்கோவில் அருகே பூங்குடி கிராமத்தில்

## பகுதிநேர அங்காடி மற்றும் அங்கன்வாடி கட்டிடத்தை சட்டத்துறை அமைச்சர் ரகுபதி திறந்துவைத்தார்

ஆவுடையார்கோவில், ஜூலை.22–

**புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே பூங்குடி கிராமத்தில் புண்ணிய வயல் கவுன்சிலர் செந்தில்குமரன் தனது சொந்த இடத்தில் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ள பகுதிநேர பொதுவினியோக கட்டிடத்தை முதலில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி திறந்துவைத்தார்.**



*பிறகு பூங்குடியில் 10.19 லட்சத்தில் கட்டப்பட்ட அங்கன்வாடி கட்டிடத்தையும் திறந்துவைத்தார். அப்போது ஒருசிலருக்கு தார்பாய், மருந்து தெளிப்பான் போன்றவற்றை பொதுமக்களுக்கு வழங்கி சட்டத்துறை அமைச்சர் ரகுபதி பேசினார், தி.மு.க அரசானது தொடர்ந்து மக்களுக்கு தேவையான நலதிட்டங்களை செயல்படுத்தும் அரசாக இருக்கிறது. மூன்று கிலோமீட்டர் தூரத்திற்குள் ஒரு பகுதி நேர அங்காடி திறந்து வருவதாகவும். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு அங்கன்வாடிகட்டிடத்தை திறந்து அனைத்து குழந்தைகளையும் கல்வி கற்க வைக்க வேண்டும் என்றுமுதல்வர்வழியுறுத்தி வறுவதாகவும் கூறினார்.*

*அவருடன் மணமேல்குடி சேர்மன் கார்த்திகேயன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். உதயம் சண்முகம் ஆவுடையார்கோவில் சேர்மன் உமாதேவி*

*மாவட்ட கவுன்சிலர் கே.கே.சி.ராமநாதன் திருப்பெருந்துரை ஊ.ம.தலைவர்.சந்திரா ராஜமாணிக்கம் புண்ணிய வயல் ஊராட்சி மன்றத் தலைவர் சுரேஷ் உட்பட 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.*



▶ புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 48 ஆம் ஆண்டு கம்பன் பெருவிழா புதுக்கோட்டை நகர்மன்ற வளாகத்தில் ஜூலை 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை தொடங்கியது. 8ம் நாள் விழா வழக்காடு மன்றம் நிகழ்விற்கு அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சுப்பையா தலைமை வகித்தார். நடுவராக தென்காசி ராமச்சந்திரன் பங்கேற்றார். நிகழ்வில் கம்பன் கழக தலைவர் ராமச்சந்திரன், செயலாளர் சம்பத்குமார், பிஎஸ்கே கல்வி நிறுவனங்களின் தாளாளர் கருப்பையா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். முன்னதாக சுப பாரதி கல்லூரியின் நிர்வாகிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்ற மாணவராகம் நடைபெற்றது.

## மணிப்பூர் வன்கொடுமை 78 நாட்களாக போலீஸ் காத்திருக்க யார் காரணம்? திரிணமூல் காங். கேள்வி




கொல்கத்தா, ஜூலை.22–

**மணிப்பூரில் குகி சமூகத்தைச் சேர்ந்த 2 இளம் பெண்கள் கடந்த மே மாதம் 4-ஆம் தேதி கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில், சமூக வலைதளங்களில் வீடியோ வெளியாகி வைரலாகும் வரை சம்பந்தப்பட்ட நபர்கள் மீது காவல் துறை நடவடிக்கை எடுக்காத காரணம் தொடர்பாக கேள்விகளை அடுக்கியுள்ளார் திரிணமூல் காங்கிஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் சாகெட் கோகலே.**

இது தொடர்பாக ட்விட்டரில் அவர், "மணிப்பூர் அவலம், வீடியோவாக சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகும் வரை காவல் துறை காத்திருந்தது ஏன்? ஒருவேளை கைது செய்யப்பட்டவர்கள் பாஜகவைச் சேர்ந்தவர்களா? 78 நாட்களாக போலீஸ் காத்திருந்ததன் பின்னணியில் இருப்பது யார்? முதல்வர் பைரன் சிங் அவர்களே, நீங்கள் இன அழிப்புக்கு முன்னிலை வகித்துக் கொண்டிருக்கிறீர்கள். மைதேயி சமூகத்தினரும் சரி, குகி சமூகத்தினரும் சரி உங்கள் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். மணிப்பூரைக் காப்பாற்ற நீங்கள் ராஜினாமா செய்ய வேண்டும்.

நீங்கள் இந்தப் பிரச்சினையை தாமாக முன்வந்து விசாரிக்க உத்தரவிட்டதாகக் கூறுகிறீர்கள். ஆனால், இதே சம்பவம் தொடர்பாக ஒரு மாதத்துக்கு முன்னரே முதல் தகவல் அறிக்கை பதிவாகியுள்ளது. தாமாக முன்வந்து என்பதன் அர்த்தம் தெரியுமா உங்களுக்கு? எந்த ஒரு புகாரும் பதிவாகாத நிலையில் கவனத்தில் எடுத்துக் கொள்ளுதலே தாமாக முன்வந்து என்பதற்கான அர்த்தம்" என்று கோகலே அடுக்கடுக்காக கேள்விகளை முன்வைத்துள்ளார்.

முன்னதாக, பாதிக்கப்பட்ட பெண்களில் ஒருவர் ஒரு செய்தித்தாளுக்கு அளித்தப் பேட்டியில் சம்பவத்தன்று கலவரக்காரர்களுக்குப் பயந்து தாங்கள் வனப்பகுதியில் ஒளிந்திருந்ததாகவும், அப்போது காவல் துறையினர் அவர்களை மீட்டு வரும் வழியில் மைத்தேயி குழுவினரிடம் தங்களை விட்டுச் சென்றதாகவும் கூறியிருந்தார். இது பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்நிலையில், இது குறித்து நாங்போக் செக்மாய் காவல் நிலைய மூத்த அதிகாரி சச்சிதானந்தா கூறுகையில், "சம்பவம் நடந்த தினத்தன்று எங்கள் காவல் நிலையம் வன்முறையாளர்களால் சூழப்பட்டதால் நாங்கள் அந்தக்கலவரத்தைஒடுக்குவதில் பரபரப்பாக இருந்தோம். மேலும், பாதிக்கப்பட்டப் பெண் கூறியதுபோல் நாங்கள் அந்தப் பெண்களை வன்முறையாளர்களிடம் விட்டு வரவில்லை" என்று விளக்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கடந்த மே 18-ஆம் தேதி தங்போய்வைபெய் கிராமத்தின் தலைவர், காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். 40 குடும்பங்களே வாழும் அக்கிராமத்தின் தலைவரான பைனோமுக்கு வயது 65. சாய்குல் காவல் நிலையத்தில் அவர் புகார் அளித்தார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மே 4-ஆம் தேதியன்று சம்பவம் நடந்த நிலையில் ஜூலை 19-ஆம் தேதி, அதாவது நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடருக்கு ஒரு நாள் முன்னதாக அது சமூக வலைதளங்களில் வெளியானதன் பின்னணி குறித்தும் சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர். சம்பவம் நடந்த கிராம் ஹெய்ரோக் சட்டப்பேரவை தொகுதிக்குள் உள்ளது. இது பாஜக எம்எல்ஏ தொக்சோமின் தொகுதி. ஆகையால், இது வேண்டுமென்றே இப்போது கசியவிடப்பட்டது என்று சிலர் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

மணிப்பூர் சம்பவத்தால் இரண்டாவது நாளாக நாடாளுமன்றம் முடங்கியது. பிரதமர் பேச வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் பிடிவாதம் காட்டி வருகின்றன. கடந்த கூட்டத்தொடர் முழுவதும் அதானி குழுமத்தின் ஹிண்டன்பெர்க் அறிக்கை சர்ச்சையால் முடங்கிய நிலையில், இந்தக் கூட்டத் தொடரில் மணிப்பூர் சம்பவம் எதிரொலித்து வருகிறது.

### அறந்தாங்கி அருகே தனியார் நிதி நிறுவனத்தில்

## குழு கடன் பெற்று மோசடி செய்த இரண்டு பெண்கள் பாதிக்கப்பட்டோர் சாலையில் நூதன போராட்டம்



**அறந்தாங்கி, ஜூலை.22–**

*புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே உள்ள விஜயபுரம் கிராமத்தைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட பெண்களிடம் அதே கிராமத்தைச் சேர்ந்த புஷ்பம் மற்றும் அவரது மகள் செல்வி ஆகியோர் தனியார் நிறுவனத்தில் குழு கடன் பெற்று தருவதாக அவர்களின் ஆதார் அட்டை வங்கிப் புத்தகம் கையொப்பம் ஆகியவற்றை கடந்த ஆண்டு பெற்றுள்ளனர். இந்த 40 பெண்களிடமும் 7 தனியார் நிதி நிறுவனத்தில் 40 லட்சம் ரூபாய் வரையில் குழு தலைவியாகசெயல்பட்ட புஷ்பம் மற்றும் செல்வி பெற்று அதனை அவர்கள் இருவருமே வைத்துக் கொண்டதாக தெரிகிறது.அதற்கான வார தவணைத் தொகையை கடந்த 9 மாதங்களாக இரு பெண்களும் கட்டி வந்ததால் எந்த பிரச்சனையும் இல்லாத சூழலில் கடந்த 12ஆம் தேதி சம்பந்தப்பட்ட தனியார்நிதிநிறுவனத்தின் அலுவலர்கள் 40 பெண்களின்வீடுகளுக்கும் வந்து உங்கள் பெயரில் பெறப்பட்ட கடன் தொகையை கட்டுமாறு கூறியுள்ளனர்.*

*இதனால் அதிர்ச்சி அடைந்த பெண்கள் நாங்கள் கடன் ஏதும் வாங்கவில்லை என்றும் தங்கள் பெயரை பயன்படுத்தி புஷ்பம் மற்றும் அவரது மகள் செல்வி ஆகியோர் தான் கடன் பெற்றதாகவும் கூறியுள்ளனர், ஆனால் அதனை ஏற்காததனியார் நிதிநிறுவன அலுவலர்கள் அவர்கள் இருவரும் பணம் கட்ட முடியாது என்றுகூறிவிட்டதாகவும் மேலும் இருவரும் தற்போது தலைமுறை வாங்கி விட்டதாகவும் அதனால் யாருடைய ஆவணத்தைபயன்படுத்தி பணம் பெறப்பட்டதோ அவர்கள் தான் கட்ட வேண்டும் என்று கூறியுள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த 40 பெண்களும் செய்வதறியாது தவித்த நிலையில் இந்த தகவலை அறிந்த சில பெண்களின் கணவர்கள் ஏமாந்த அந்த பெண்களை வீட்டை விட்டு அடித்து துரத்தியதாக கூறப்படுகிறது.இதனால் செய்வது அறியாததவித்த அப்பகுதி பெண்கள் இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் காவல் நிலையத்திலும் புகார் அளித்த நிலையில் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் அவர்கள் விஜயபுரத்தில் உள்ள புஷ்பத்தின் வீட்டின் முன்பு சாலையோரம் சமைத்து உண்ணும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*இதனையடுத்து அங்கு வந்த போலீசார் நடந்த விபரங்களை கேட்டு அறிந்து 40 பெண்களிடம் 40 லட்சம் ரூபாய் வரையில் மோசடி செய்த நபர்கள் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்துள்ளனர்.இது குறித்து பாதிக்கப்பட்ட பெண்கள் கூறுகையில் : தங்கள் பெயரையும் ஆதார் அட்டை உள்ளிட்ட ஆவணங்களை மோசடியாகபயன்படுத்தி புஷ்பம் மற்றும் அவரது மகள் செல்வி ஆகியோர் 7 தனியார் நிதி நிறுவனங்களில் 40 லட்சம் ரூபாய்க்கு மேல் குழு கடன்களை பெற்று தங்களை ஏமாற்றி விட்டதாகவும் இதனால் தங்களது கணவன்கள் தங்களை வீட்ட விட்டு விரட்டி அடித்து உள்ளதால் வேறு வழியில்லாமல் சாலையோரம் சமைத்து உண்ணும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் வாழ்வை கருத்தில் கொண்டு மாவட்ட நிர்வாகம் காவல்துறையினரும் உரியநடவடிக்கைஎடுத்து தங்களிடம் மோசடியில் ஈடுபட்ட புஷ்பம் மற்றும் செல்வியிடம் இருந்து பணத்தை பறிமுதல் செய்து தங்களது கடனை அடைக்க வேண்டும் என கண்ணீரோடுகோரிக்கை விடுத்துள்ளனர்.இந்த போராட்டத்தின் போது அறந்தாங்கி கிழக்கு ஒன்றிய செயலாளர் குமார் திமுக நிர்வாகி சுரேஷ், கொடிவயல் செந்தில்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.*

# இன்று

# 22-7-2023

கொய்யா கொழுந்து இலை மென்று தின்றால் குடல் வாயு தீரும்
சக வருடம் 1945 ஆஷாடம் 31

| சோபகிருது ஆடி 6 | JUL - SAT சனி | முஹர்ரம் 3 வளர்பிறை 203 / 162 | இராசிபலன் |
|---|---|---|---|
| வளர். சதுர்த்தி 04.59 (கா.08.01) பூரம் 25.02 (மா.04.02) தியாஜ் 44.38 அகஸ் 31.16 சித்த 25.02 மேல் மரண. ஆடிப்பூரம். ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் ரெங்கமன்னார் பெருந்தேரில் பவனி. மதுரை அழகர் கோவில் நூபுரகங்கை ராக்காயி அம்மனுக்கு வளையல் அலங்காரத்தில் காட்சி. சிறிய நகக. | | | மேஷம் - நடங்கல் |
| | | | ரிஷபம் - ஆக்கம் |
| | | | மிதுனம் - நன்மை |
| | | | கடகம் - வரவு |
| | | | சிம்மம் - அசதி |

| நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 7.45-8.45 | 10.45-11.45 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை: 4.45-5.45 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம்: கிழக்கு; பரிகாரம்: தயிர்; கடக லக்கனம் இருப்பு நா. 4 வி. 38; சந்திராஷ்டமம் அவிட்டம் சதயம்; கரணம்: 12-1.30; சூரிய உதயம்: 6.01

வினை விதைத்தவன் வினை அறுப்பான்

கன்னி - வெற்றி, துலாம் - களிப்பு, விருச்சி - லாபம், தனுசு - வரவு, மகரம் - துயரம், கும்பம் - தெளிவு, மீனம் - போட்டி

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

தீக்குச்சி தீப்பெட்டியிடம் கேட்டது,
நீயும் நானும் ஒவ்வொரு முறை
உரசும்போதும் நானே பற்றி
எரிகிறேன், நீ எரிவதில்லையே
ஏன்?

தீப்பெட்டி சொன்னது...தலைக்கனம்
உள்ளவர்கள் விரைவில்
அழிந்துபோவார்கள்






# ஜெய்ப்பூரில் அடுத்தடுத்து ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டரில் 4.4 ஆக பதிவு பீதியில் மக்கள்

ஜெய்ப்பூர், ஜூலை22-

ராஜஸ்தான் மாநிலத் தலைநகர் ஜெய்ப்பூரில் நேற்று அதிகாலை அடுத்தடுத்த ஏற்பட்ட நிலநடுக்கங்களால் மக்கள் பீதியடைந்து வீதிகளில் தஞ்சம் புகுந்தனர். இந்த நிலநடுக்கம் ரிக்டரில் 4.4 ஆக பதிவானது.

இது தொடர்பாக தேசிய நிலநடுக்க ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில், ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நேற்று அதிகாலை 4.09 மணியளவில் 4.4 ரிக்டராக பதிவானது. இது நிலத்துக்கு அடியில் 10 கிலோமீட்டர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என்று தெரிவித்துள்ளது.

அடுத்தடுத்து 4 முறை: முதலில் அதிகாலை 4.09 மணியளவில் 4.4 ரிக்டர் அளவில் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் பின்னர் 4.22 மணியளவில் 3.1 ரிக்டர், 4.25 மணியளவில் 3.4 ரிக்டர் என மூன்று முறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

அரைமணி நேரத்தில் 3 நிலநடுக்கங்கள் ஏற்பட்டதால் மக்கள் பீதியடைந்தனர். அதிகாலையில் வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்த மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்தனர். வாட்ஸ் அப், ட்விட்டர் என சமூக வலைதளங்கள் மூலம் நிலநடுக்கம் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து உற்றார், உறவினர்களின் நலன் விசாரித்தனர். இந்த நிலநடுக்கத்தில் உயிரிழப்போ, பொருட்சேதமோ ஏற்பட்டதாக இதுவரை தகவலில்லை.

முன்னாள் முதல்வர் வசுந்தரா ராஜே தனது ட்விட்டர் பக்கத்தில், ஜெய்ப்பூரில் நிலநடுக்கத்தை உணர்ந்தேன். மக்கள் அனைவரும் நலமா? என்று பதிவிட்டிருந்தார்.

# மணிப்பூரில் இரு பெண்களை நிர்வாணமாக இழுத்துச் சென்ற இளைஞரின் வீட்டுக்கு தீ வைப்பு

இம்பால், ஜூலை22-

மணிப்பூரில் இரு பெண்களை ஆடையின்றி, மானபங்கம் செய்தபடி கிராமத்துக்குள் ஊர்வலமாக இழுத்துச் சென்ற இளைஞர்களில் ஒருவரது வீட்டுக்கு தீ வைக்கப்பட்டது.

கடந்த மே 4-ம் தேதி, மணிப்பூரின் சேனாபதி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் பழங்குடியினத்தை சேர்ந்த சிலரை மைத்தேயி இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கடத்திச் சென்றனர்.

அவர்களில் இரு பெண்களை ஆடையின்றி, மானபங்கம் செய்தபடி கிராமத்துக்குள் ஊர்வலமாக இளைஞர்கள் அழைத்துச் சென்றனர். அதில் ஒரு பெண்ணை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்தனர். தங்களை விட்டு விடும்படி அந்த இளைஞர்களிடம் பழங்குடியின பெண்கள் கெஞ்சினர். இச்சம்பவத்தை தடுக்க முயன்ற



ஒரு பழங்குடியின இளைஞரையும் அவர்கள் கொலைசெய்தனர். அந்த வீடியோ காட்சிகள் புதன்கிழமை சமூக ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில் அந்த வீடியோ வெளியாகி இரண்டு நாட்களுக்குப் பின்னர் வன்கொடுமையில் ஈடுபட்ட இளைஞர்களில் ஒருவரது வீட்டுக்கு தீவைக்கப்பட்டது. இதற்கிடையில் இந்தச் சம்பவம் தொடர்பாக 4 பேரை போலீஸார் கைது செய்தனர். முன்னதாக மணிப்பூர் முதல்வர் பைரன் சிங் இந்தக் கொடுமையை நிகழ்த்தியவர்கள் நிச்சயமாக கைது செய்யப்பட்டு வாய்ப்பிருந்தால் மரண தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று தெரிவித்திருந்தார்.

மணிப்பூர் சம்பவம் தொடர்பாக போலீஸார் கடத்தல், கூட்டு பாலியல் பலாத்காரம் மற்றும் கொலை வழக்குப் பதிவு செய்துள்ளது.

இந்நிலையில், மணிப்பூரில் இரு பெண்களை ஆடையின்றி, மானபங்கம் செய்தபடி கிராமத்துக்குள் ஊர்வலமாக இழுத்துச் சென்ற இளைஞர்களில் ஒருவரது வீட்டுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. அந்த இளைஞர் சார்ந்த மெய்தி இனப் பெண்களே அந்த இளைஞரின் வீட்டுக்குத் தீவைத்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தச் சம்பவத்தால் ஒட்டுமொத்த மெய்தி இனத்துக்கும் அந்த இளைஞர்கள் அவமானத்தை ஏற்படுத்திவிட்டதாக அப்பெண்கள் கூறியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சிவகங்கை மாவட்டத்தில் இயற்கை முறையில் காய்கறி விளைவிக்கும் கைதிகள்

**சிவகங்கை, ஜூலை22-**

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் அருகேயுள்ள புரசடை உடைப்பு திறந்தவெளி சிறையில் இயற்கை முறையில் காய்கறிகளை கைதிகள் விளைவிக்கின்றனர்.



திறந்தவெளி சிறையில் விவசாயப் பணியில் ஈடுபட்ட கைதிகள்.

புரசை உடைப்பு திறந்தவெளிச் சிறை 2013-ம் ஆண்டு திறக்கப்பட்டது. இங்கு பல்வேறு சிறைகளில் இருந்து நன்னடத்தைக் கைதிகள் கொண்டு வரப்படுகின்றனர். தற்போது 51 கைதி கள் உள்ளனர். 85 ஏக்கரில் அமைந்த இந்தச் சிறையில் 35 ஏக்கரில் விவசாயம் செய்யப்படுகிறது. இப்பணியை கைதிகளே மேற்கொள்கின்றனர்.

ஆரம்பத்தில் கரடு, முரடாக இருந்த இந்தச் சிறை வளாகம் தற்போது பசுமையாக காணப்படுகிறது. இங்கு கத்தரி, வெண்டை, புடலை, அவரை, பீர்க்கை, உளுந்து, வாழை, மரவள்ளிக் கிழங்கு, கரும்பு, சோளம், நிலக்கடலை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப் படுகின்றன. மேலும், தென்னை, கொய்யா, நெல்லி, முந்திரி, பலா, எலுமிச்சை, ரோஸ்உட், சந்தனம், தேக்கு, மகாகனி உள்ளிட்ட மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இது தவிர ஆடு, நாட்டு மாடுகளும் வளர்க்கப்படுகின்றன.

அவற்றின் கழிவுகளைப் பயிர்களுக்கு இயற்கை உரங்களாகப் பயன்படுத்து கின்றனர். இங்கு விளைவிக்கப்படும் காய்கறிகள், பழங்கள் மதுரை மத்தியச் சிறையில் உள்ள அங்காடிகளில் விற்பனை செய்யப்படுகிது. அவர்கள் கடந்த 3 மாதங்களில் 2 டன் வரை காய்கறிகளை விளை வித்தனர். மேலும் விவசாயப் பரப்பை அதிகரிக்கும் வகையில் கிணறு அமைக்க சிறைத் துறை டிஜிபி அம்ரேஷ் பூஜாரி முயற்சி எடுத்துள்ளார்.

இது குறித்து சிறைத்துறை டிஐஜி பழனி கூறுகையில் 'இங்கு இயற்கை முறையில் விவசாயம் செய்யப்படுகிறது. விவசாயப் பணிகளில் ஈடுபடும் கைதிகளுக்கும் மன அழுத்தம் குறைகிறது. இயற்கையோடு வாழ்வதால் மனமாற்றம் அடைகின்றனர். திறந்தவெளி சிறை மீது டி.ஜி.பி கூடுதல் கவனம் செலுத்தி வருகிறார். விவசாயப் பரப்பை அதிகரிக்க உள்ளோம்' என்றார்.






# கல்பாக்கம் அருகே வயல்வெளியில் பாம்பு கடித்து விவசாயி உயிரிழப்பு

**செங்கல்பட்டு, ஜூலை22-**

செங்கல்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அடுத்த கொடூர் ஊராட்சிக்கு உட்பட்ட கருக்காமலை கிராமத்தை சார்ந்தவர் தனசெழியன் தந்தைபெயர்ராஜாராமன் வயது (58) விவசாயியான இவர் நேற்று மலை 6 மணியளவில் வயலுக்கு தண்ணீர் பைய்ச்ச சென்றுள்ளார் வயல் வரப்பில் இருந்த விஷப்பாம்பு தனசெழியனை கடித்துள்ளது உடனடியாக அவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு



கொண்டு சென்று சேர்த்தனர் சிகிச்சை பலனின்றி அவர் இறந்தார்.

வயல்வெளிக்கு சென்றவரை பாம்பு கடித்த சம்பவம் அப்பகுதியில் பெறும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# திருமானூரில் கரும்பு விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டம்

அரியலூர் ஜூலை 22

திருமானூரில் கருப்பு விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் அரியலூர் மாவட்ட குழு, கோத்தாரி சர்க்கரை ஆலை சாத்தமங்கலம், சார்பாக திருமானூர் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட தலைவர் கரும்பாயிரம் தலைமை வகித்தார்.



மத்திய அரசாங்கம், கரும்பு டன் ஒன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய் வழங்க வேண்டும். தமிழக அரசு டன் ஒன்றுக்கு 4 ஆயிரம் ரூபாய் வழங்குவதாக தேர்தல் காலத்தில் அறிவித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். நெல் குவிண்டால் ஒன்றுக்கு தேர்தல் வாக்குறுதி படி ரூபாய் 2500 உடனடியாக வழங்க வேண்டும். உட்பட ஆறு கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில், கரும்பு விவசாயிகள் சங்க முன்னாள் மாநில குழு உறுப்பினர் அண்ணாதுரை, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட துணைச் செயலாளர் கீழ காவட்டாங்குறிச்சி மணியன், சங்க நிர்வாகிகள் வைத்திலிங்கம், நாகராஜன், கணேசன், கலியபெருமாள், பொன்னுச்சாமி, மாவட்ட நிர்வாகிகள் ராஜேந்திரன், மணிவேல், தங்கராசு, ஜெகநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மணிப்பூர் கொடூர சம்பவம் தொடர்பாக முக்கிய குற்றவாளிகள் கைது: தேசிய மகளிர் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை

புதுடெல்லி, ஜூலை22-

மணிப்பூரில் பழங்குடியின பெண்களுக்கு நேர்ந்த கொடூர சம்பவம் குறித்து தேசிய மகளிர் ஆணையம் வியாழக்கிழமை தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்தது. அந்த வீடியோ காட்சிகளை நீக்கும்படி ட்விட்டர் இந்தியாவுக்கு தேசிய மகளிர் ஆணையம் உத்தரவிட்டது.



மணிப்பூரில் மைத்தேயி இனமக்கள் 53 சதவீதம் பேர் உள்ளனர். இவர்கள் இம்பால் பள்ளத்தாக்கு பகுதியில் வசிக்கின்றனர். குகி மற்றும் நாகா பழங்குடியினத்தவர்கள் 40 சதவீதம் பேர் உள்ளனர். இவர்கள் மலைப் பகுதிகளில் வசிக்கின்றனர். இந்நிலையில், மைத்தேயி மக்களும் தங்களுக்கு பழங்குடியினர் அந்தஸ்து வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பழங்குடியினத்தவர்கள் கடந்த மே 3-ம் தேதி ஒற்றுமை பேரணிநடத்தினர்.

இதில் பழங்குடியினத் தவர்களுக்கும், மைத்தேயி இனத்தவர்களுக்கும்வன்முறை வெடித்து மாநிலம் முழுவதும் பரவியது. பல கட்டிடங்களுக்கு தீ வைக்கப்பட்டது. கலவரத்தை கட்டுப்படுத்த ராணுவத்தினரும், துணை ராணுவப் படையினரும் குவிக்கப்பட்டனர். மணிப்பூரில் 2 மாதங்களுக்கு மேலாக தொடர்ந்த வன்முறை சம்பங்களில் 150-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர், பலர் காயம் அடைந்தனர்.

இந்நிலையில் கடந்த மே 4-ம் தேதி, மணிப்பூரின் சேனாபதி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் பழங்குடியினத்தை சேர்ந்த சிலரை மைத்தேயி இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கடத்திச் சென்றனர்.

அவர்களில் இரு பெண்களை ஆடையின்றி, மானபங்கம் செய்தபடி கிராமத்துக்குள் ஊர்வலமாக இளைஞர்கள் அழைத்துச் சென்றனர். அதில் ஒரு பெண்ணை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்தனர். தங்களை விட்டு விடும்படி அந்த இளைஞர்களிடம் பழங்குடியின பெண்கள் கெஞ்சினர். இச்சம்பவத்தை தடுக்க முயன்ற ஒரு பழங்குடியின இளைஞரையும் அவர்கள் கொலைசெய்தனர். அந்த வீடியோ காட்சிகள் புதன்கிழமை சமூக ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், இச்சம்பவம் குறித்து தேசிய மகளிர் ஆணையதலைவர் ரேகா சர்மா நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில் கூறியதாவது:

மணிப்பூரில் நடந்த சம்பவத்தை தேசிய மகளிர் ஆணையம் கண்டிக்கிறது. இது தொடர்பாக தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்துள்ளோம். இந்த விஷயத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி மணிப்பூர் டிஜிபியிடம் கூறினோம். இச்சம்பவத்தில் ஈடுபட்டுள்ள முக்கிய குற்றவாளியை கைது செய்துள்ளதாகவும், மற்றவர்களும் விரைவில் கைது செய்யப்படுவர் எனவும் அவர் உறுதியளித்துள்ளார். மணிப்பூர் வீடியோ காட்சியை ட்விட்டரில் இருந்து நீக்க ட்விட்டர் இந்தியா நிறுவனத்துக்கு உத்தரவிட்டுள்ளோம். இவ்வாறு ரேகா சர்மா கூறினார்.

மணிப்பூர் வீடியோ சம்பவம் வெளியான பின்பு, மணிப்பூரின் தவுபல் மாவட்டத்தில் உள்ள நாங்போக் செக்மாய் காவல் நிலையத்தில், அடையாளம் கண்டறியப்படாத ஆயுத கும்பல் மீது கடத்தல், கூட்டு பாலியல் வன்கொடுமை, மற்றும் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வீடியோ பதிவில் தெரியும் முக்கிய குற்றவாளிகள் இருவரை போலீசார் நேற்று கைது செய்தனர். மற்றவர்களையும் பிடிக்க தீவிர தேடுதல் வேட்டையில் சிறப்புப் படை போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

மணிப்பூர் வீடியோ சம்பவம் குறித்து மாநில முதல்வர் பிரேன் சிங்குடன் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி பேசினார். இச்சம்பவம் தொடர்பான விசாரணை தீவிரமாக நடைபெறுவதாகவும், இதில் ஈடுபட்டவர்கள் யாரும் தப்ப முடியாது எனவும் அமைச்சர் ஸ்மிருதி இராணியிடம் முதல்வர் பிரேன் சிங் தெரிவித்தார்.

**அமித் ஷா உத்தரவு:** மணிப்பூர் முதல்வர் பிரேன் சிங்குடன் நேற்று பேசிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மணிப்பூர் வீடியோ சம்பவத்தில் ஈடுபட்ட அனைவரையும் பிடித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மிக சிறிது, மிக தாமதம்:** மணிப்பூர் சம்பவம் பற்றி பிரதமர் மோடி கூறியது பற்றி காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறியதாவது:

புரிந்துகொள்ள முடியாத, மன்னிக்க முடியாத 1800 மணி நேரத்துக்கும் மேலான அமைதிக்குப் பின்பு, மணிப்பூர் சம்பவம் குறித்து பிரதமர் மோடி மொத்தம் 30 வினாடிகள் பேசியுள்ளார். அரசின் தோல்விகளை மறைக்கவும், மணிப்பூர் மனிதத் தன்மையற்ற சோக சம்பவத்தில் இருந்து கவனத்தை திசை திருப்பவும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் பெண்களுக்கு எதிராக நடக்கும் குற்றங்கள் பற்றி பேசுகிறார். மணிப்பூரில் நடைபெறும் இனக் கலவர விவகாரத்திலிருந்து பிரதமர் மோடி முற்றிலும் விலகிச் செல்கிறார்.

மணிப்பூரில் சட்டம், ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளது. இப்போது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மிகவும் சிறியது மிகவும்தாமதமானது. வெறும் வார்த்தைகளால் எதுவும் நடக்காது. செயல்கள் மூலம் பேசவேண்டும். இச்சம்பவத்துக்கான பொறுப்பிலிருந்து பிரதமரும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் தப்ப முடியாது. மணிப்பூர் முதல்வர் உடனடியாக பதவி விலக வேண்டும். இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

**ப.சிதம்பரம் கண்டனம்:** முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் ட்விட்டரில் விடுத்துள்ள செய்தியில், "முதலாவதாக மணிப்பூரில் பிரேன் சிங் ஆட்சியைபிரதமர் மோடி கலைத்துவிட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும். மணிப்பூர் விஷயத்தில் பிரதமர் இப்போதுதான் தனது அமைதியை கலைத்துள்ளார். அமெரிக்கா, பிரான்ஸ், ஐக்கிய அரபு நாடுகளுக்கு பயணம் செய்யும்போதெல்லாம் அவர் மணிப்பூர் மக்கள் பற்றி நினைக்கவில்லை. பெண்களுக்கு எதிராக நடந்த கொடூர சம்பவத்தால் மணிப்பூர் பற்றி அவருக்கு ஞாபகம் வந்ததா? அல்லது உச்ச நீதிமன்ற எச்சரிக்கை காரணமா?" என குறிப்பிட்டுள்ளார்.

**மரண தண்டனை:** மணிப்பூர் சம்பவம் குறித்து முதல்வர் பிரேன் சிங் அளித்துள்ள பேட்டியில், ''மனிதத் தன்மையற்ற செயலுக்கு உள்ளான இரண்டு பெண்களையும் நினைத்து வேதனைப்படுகிறேன். வீடியோ வெளியானவுடனே போலீஸார் தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்து, முதல் நபரை கைது செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை நடைபெறுகிறது. இச்சம்பவத்தில் ஈடுபட்ட அனைவர் மீதும் கடும் நடவடிக்கை உறுதி செய்யப்படும். அவர்களுக்கு மரணதண்டனைகிடைக்கவும் வாய்ப்புள்ளது. இதுபோன்ற கொடூர செயல்களுக்கு நமது சமூகத்தில் இடமில்லை'' என்றார்.

# பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோவிலில் பந்தகால் நிகழ்ச்சியுடன் ஆடி திருவிழா துவங்கியது





ஊத்துக்கோட்டை, ஜூலை22-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையத்தில் உள்ள ஆரணி ஆற்றங்கரையில் பிரசித்தி பெற்ற அருள்மிகு பவானி அம்மன் திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில் ஆடி மாதம் முதல் சனிக்கிழமை முதல் 14 வாரங்கள் தொடர்ந்து ஆடித் திருவிழா நடைபெறும்.

இத்திருவிழாவுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும், அமெரிக்கா, சிங்கப்பூர் உள்ளிட்ட வெளிநாடுகளில்இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இக்கோவிலுக்கு வந்து தங்களது நேர்த்தி கடனை செலுத்தி விட்டு செல்வார்.

இந்நிலையில், ஆடி மாதம் முதல் வெள்ளிக்கிழமை இக்கோவிலில் பந்தகால் நடும் நிகழ்ச்சி நடைபெறும். அன்றிலிருந்து இக்கோவிலில் ஆடித் திருவிழா துவங்கும். இந்நிலையில், நேற்று ஆடி மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை ஆகும். எனவே, இக்கோவிலில் நேற்று விடியற்காலை கோபூஜை, மூலவர் சுயம்பு அம்மனுக்கு மகா அபிஷேகம், மகா அலங்காரம், மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது.

இதன் பின்னர், கடக லக்னத்தில் பந்தகால் நடும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவிலில் பரம்பரை அறங்காவலர் அஞ்சன்லோகமித்ரா தலைமையில் திருக்கோவிலின் செயல் அலுவலர் பிரகாஷ் மற்றும் ஊழியர்கள், பணியாளர்கள் சிறப்பாகசெய்திருந்தனர்.

22.07.2023 வரலாறு

மாகரல் அருள்மிகு ஸ்ரீ பவானி அம்மன் கோவிலில்

# 10-ம் ஆண்டு திருவிழாவை முன்னிட்டு முளைப்பாரி ஊர்வலம் நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, ஜூலை22-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம்,மாகரல் கிராமத்தில் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ பவானி அம்மன் கோவில் ஒன்று உள்ளது.இந்த கோயிலில் ஆண்டுதோறும் ஆடி மாதம் முதல் வாரத்தை முன்னிட்டு கூழ் ஊற்றும் நிகழ்ச்சியும்,முளைப்பாரி ஊர்வலம் செல்லும் திருவிழா நிகழ்ச்சியும் விமர்சையாக நடைபெறும்.

இந்நிலையில்,நேற்று ஆடி மாதம் முதல் வாரத்தை முன்னிட்டு கூழ் ஊற்றுதல் மற்றும் முளைப்பாரி ஊர்வலம் செல்லும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இதை முன்னிட்டு மூலவர் அருள்மிகு ஸ்ரீ பவானி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம்,சிறப்பு அலங்காரம்,மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது.

இதை தொடர்ந்து ஆலய வளாகத்தில் இருந்து காப்பு கட்டி விரதம் இருந்த ஏராளமான பக்தர்கள் தங்களது தலையில் பயபக்தியுடன் முளைப்பாரியை சுமந்து கொண்டு கோவிலில் இருந்து சிவன் கோவில் தெரு,பிள்ளையார் கோவில் தெரு,பொன்னியம்மன் கோவில் தெரு,பஜனை கோவில் தெரு,எம்ஜிஆர் தெரு உள்ளிட்ட முக்கிய தெருக்களின் வழியாக ஊர்வலம் சென்று வந்தனர். இதன்பின்னர்,முளைப்பாரிக்கு மகாதீபாரதனை காண்பிக்கப்பட்டது.பின்னர், முளைப்பாரியை அல்லாரம் குளத்தில் கரைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், எல்லாபுரம் ஒன்றிய குழு உறுப்பினர் கோடுவெளி குழந்தைவேலு உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். நேற்று மாலை ஆடிப்பூர விசேஷ தீபாராதனை நடைபெற்றது. இன்று மாலை பதிபூஜையுடன் தீபாராதனை நடைபெறுகிறது. நாளை காலை கூழ் ஊற்றும் நிகழ்ச்சியும்,மாலை பொங்கல் வைக்கும் நிகழ்ச்சியும்,அதை தொடர்ந்து இரவு பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட அம்மன் திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இரவு பாரத மாதா நாடக சபாவின் தெருக்கூத்து நிகழ்ச்சி ஆசிரியர் கோவர்தனன் தலைமையில் நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாகரல் கிராம பொதுமக்களும், பக்தர்களும் சிறப்பாக செய்துள்ளனர்.

# சீர்காழி சட்டைநாதர் சுவாமி கோயிலில் மண்டலபிஷேக பூர்த்தி விழா முத்து சட்டைநாதருக்கு 108 கலசபிசேகம் திரளான பக்தர்கள் சாமி தரிசனம்





சீர்காழி, ஜூலை, 22

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தருமபுரம் ஆதீனத்திற்கு உட்பட்ட சட்டைநாதர் சுவாமி கோயிலில் திருநிலை நாயகி அம்மன் உடனடியாக பிரமபுரீஸ்வரர் சுவாமி அருள் பாலிக்கிறார். பிரசித்தி பெற்ற கோயிலில் கடந்த மே மாதம் 24 ஆம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்று முடிந்தது.

இந்நிலையில் மண்டலாபிஷேகம் பூர்த்தி விழா தொடங்கி நடைபெறுகிறது. நிறைவு நாளான நேற்று முத்து சட்டை நாதருக்கு திரவியப்பொடிகள்,தேன், பழங்கள், பால், தயிர், தேன், இளநீர், சந்தனம், விபூதி உள்ளிட்ட பொருட்களை கொண்டு சிறப்பு அபிஷேகம் செய்து தீபாராதனை நடைபெற்றது.

அதனை தொடர்ந்து முத்து சட்டைநாதருக்கு புனித நீர் அடங்கிய 108 கடங்கள் வைக்கப்பட்டு சிறப்பு யாகம் செய்து தீபாராதனை நடந்தது. தருமபுரம் ஆதீனம் 27ஆவது குரு மகா சந்திதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் புனித நீர் அடங்கிய கடங்கள் புறப்பட்டு மேள, தாளங்கள் முழங்க கோயிலை வலம் வந்து முத்து சட்டைநாதருக்கு 108 குடங்களில் நிரப்பப்பட்டிருந்த புனித நீரால் அபிஷேகம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காட்டப்பட்டது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதனை தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

பெருமாள்குப்பம்-மல்லியங்குப்பம் ஊராட்சியில் உள்ள

# இந்து அன்னையர் முன்னணி அமைப்பின் சார்பில் மஞ்சள் நீர் ஊர்வலம் நடைபெற்றது





ஊத்துக்கோட்டை, ஜூலை22-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், பெருமாள்குப்பம்-மல்லியங்குப்பம் ஊராட்சியில் உள்ள இந்து அன்னையர் முன்னணி அமைப்பின் சார்பில் நேற்று மாலை மஞ்சள் நீர் ஊர்வலம் நடைபெற்றது.

நேற்று ஆடி வெள்ளிக்கிழமையின் முதல் வாரம் என்பதால் இந்த ஊராட்சியில் உள்ள கிராம தேவதையான காணியம்மன் கோவிலில் இருந்து விரதம் இருந்த நூற்றுக்கணக்கான பெண்கள் மஞ்சள் நீர் குடங்களை பயபக்தியுடன் தலையில் சுமந்த வண்ணம் மாட வீதிகளின் வழியாக ஊர்வலமாக சென்று மீண்டும் கோவிலை வந்தடைந்தனர்.

பின்னர், மூலவர் அம்மனுக்கு மஞ்சள் நீர் அபிஷேகம் செய்தனர். இதன் பின்னர், இந்து அன்னையர் முன்னணியின் சார்பில் உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதைத்தொடர்ந்து மூலவருக்கு அலங்காரம்,மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது. இந் நிகழ்ச்சிகளுக்கு,திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இந்து முன்னணி அமைப்பின் மாவட்ட துணைத் தலைவர் மோகன் சுவாமிகள் தலைமை தாங்கினார். திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் குமார்,ஆரணி பேரூர் தலைவர் ரங்கநாதன், ஆரணிபேரூராட்சிமன்ற 15-வது வார்டு உறுப்பினர் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளராக இந்து முன்னணி அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் பரமேஸ்வரன் கலந்து கொண்டார்.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பெருமாள்குப்பம்-மல்லியங்குப்பம் ஊராட்சியில் உள்ள இந்து அன்னையர் முன்னணி அமைப்பினரும்,கிராம பொதுமக்களும் சிறப்பாக செய்திருந்தனர்.



காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே நேற்று தனது 81-வது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். இதையொட்டி நாடு முழுவதும் காங்கிரஸ் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக காரைக்கால் மாவட்டத்தில் மாவட்டத் தலைவர் சந்திரமோகன் தலைமையில் காரைக்காலில் உள்ள முதியோர் இல்லம் ஒன்றில் கேக் வெட்டி முதியோர்களுக்கு உணவு வழங்கி கார்கே வின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் புதுச்சேரி மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ஏ.வி.சுப்பிரமணியன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து மாநில செயலாளர் பாஸ்கரன் மாவட்ட செயலாளர் கருணாநிதி மாவட்ட இளைஞரணி தலைவர் ரஞ்சித் மாவட்ட மகளிர் அணி தலைவி நிர்மலா முரளி சமீர் ரமேஷ் பாப்பையன் சோமு மற்றும் காங்கிரஸ் கட்சியின் பல்வேறு பிரிவு தலைவர்கள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



ஆடி முதல் வெள்ளியை முன்னிட்டு உத்திரமேரூர் நடுத்தெரு மாரியம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

# கோவையில் தாமதமாகும் மேற்கு புறவழிச் சாலை திட்டப் பணி!



கோவை , ஜூலை, 22

கோவை மேற்கு புறவழிச்சாலை திட்டப்பணிக்கு, ஒப்பந்த நிறுவனம் தேர்வாகியும், பணி ஆணை வழங்கப்படாததால், திட்டப்பணி தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கோவை நகரில் நிலவும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க,மேற்குபுறவழிச்சாலை அமைக்கப்படும் என தமிழக அரசு அறிவித்தது. பாலக்காடு சாலை மதுக்கரையில் தொடங்கி, சுண்டக்காமுத்தூர், பேரூர் செட்டிபாளையம், தீத்திபாளையம், மாதம்பட்டி, பேரூர் மேற்கு சித்திரைச் சாவடி, கலிக்க நாயக்கன்பாளையம், சோமையம் பாளையம், வடவள்ளி, பன்னிமடை, குருடம்பாளையம், நஞ்சுண்டாபுரம் வழியாக நரசிம்ம நாயக்கன்பாளையத்தில் முடிவடையும் வகையில் மொத்தம் 32.43 கிலோ மீட்டர் தூரத்துக்கு ரூ.320 கோடி மதிப்பில் புறவழிச் சாலை அமைக்க கடந்த 2016-ம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டது. மூன்று கட்டங்களாக மாநில நெடுஞ்சாலைத் துறை மூலம் இத்திட்டப்பணி மேற் கொள்ளப்படுகிறது.

இதற்காக 16 கிராமங்களில் இருந்து 355 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்த முடிவு செய்யப்பட்டது. முதல் கட்ட திட்டத்தில் மொத்தம் 11.8 கிலோ மீட்டர் தூரத்துக்கு புறவழிச்சாலை அமைக்க ரூ.250 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் யாரும் கலந்து கொள்ளாததால், ஏப்ரல் மாதம் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் 3 நிறுவனங்கள் கலந்து கொண்டன. அதில் இருந்து திருச்சியைச் சேர்ந்த ஒரு நிறுவனம் தேர்வு செய்யப்பட்டது.

அதன் விவரம், ஒப்பந்தப்புள்ளி ஆணையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அங்கிருந்து ஒப்புதல் கிடைக்காததால், திட்டப்பணியை மேற்கொள்ள பணி ஆணை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதேசமயம் கோவைக்கு முதல்வர் ஆய்வுக்காக வரும்போது, இத்திட்டப்பணியை தொடங்கி வைக்கவும் வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக சமூக செயல்பாட்டாளர்கள் கூறும்போது,“தற்போதைய சூழலில், கோவையில் நிலவும் போக்குவரத்து நெரிசலை சமாளிக்க, மேற்குபுறவழிச்சாலை திட்டம் அவசியமான ஒன்றாகும். ஏனெனில், நீலகிரியில் இருந்து கேரளா செல்லும் வாகனங்கள், கோவை - பாலக்காடு சாலையில் இருந்து நீலகிரி செல்லும் வாகனங்கள் கோவை மாநகருக்குள் வந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது.

மேற்கு புறவழிச் சாலை திட்டம் செயல்படுத்தப்பட்டால், மாநகருக்குள் வரும் வாகனங்களின் எண்ணிக்கை குறையும். விபத்துகள், போக்குவரத்து நெரிசல்கள் குறையும். நிலம் கையகப்படுத்தும் பணியை விரைவாக முடித்து, இத்திட்டத்தை விரைவில் தொடங்க வேண்டும். அதேசமயம், பசுமைச்சூழல் மாறாத வகையில் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்’’ என்றனர்.

மாவட்ட வருவாய்த் துறையினர் கூறும் போது,‘‘மேற்கு புறவழிச் சாலை திட்டப்பணிக்கான நிலம் கையகப்படுத்தும் பணி, நெடுஞ்சாலைத் துறையினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நில உரிமையாளர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது” என்றனர்.

மாநில நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் கூறும்போது,‘‘மேற்கு புறவழிச்சாலை திட்டப்பணிக்கு விரைவில் பணி ஆணை வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதல் கட்டப் பணியில் 11.8 கிலோ மீட்டர் தூரத்துக்கு, 30 மீட்டர் அகலத்துக்கு சாலைகள் அமைக்கப்படும். இத்திட்டத்தில் இரு இடங்களில் சுரங்கப்பாதை கட்டும் திட்டமும் உள்ளது.

முதல் கட்ட பணி முடிவடைய கிட்டத்தட்ட இரு ஆண்டுகளாகிவிடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. முதல்கட்ட திட்டத்துக்காக மொத்தம் 90 சதவீதம் நிலம் கையகப்படுத்தப் பட்டுவிட்டது. இரண்டாம் கட்ட திட்டப்பணிக்கான நிலம் கையகப் படுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2-ம் கட்ட திட்டப்பணிக்காக இதுவரை 30 சதவீத நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இறுதிக்கட்ட திட்டப் பணிக்கு இன்னும் நிலம் கையகப் படுத்தும் பணி தொடங்கப்பட வில்லை” என்றனர்.

## காணவில்லை



செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கடுகப்பட்டு கிராமத்தில் **சு.துரைசாமி வயது-85** (த/பெ சுக்ரிப்பன்) என்பவர் வசித்து வந்தார்.

இவர் 12.07.2023 அன்று பகல் 12. மணி அளவில் காணவில்லை.

இவரைப் பற்றி தகவல் தெரிந்தால் தெரிவிக்க வேண்டிய முகவரி காவல் உதவி ஆய்வாளர், ஜி -10 அணைக்கட்டு காவல் நிலையம், (இ)பவுஞ்சூர், செங்கல்பட்டு மாவட்டம்-603312.

**தொடர்புக்கு: 044-2753 9688, 94981 46457,98240 25090**

# வன்னியர் மக்கள் கட்சி சார்பில் மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்






சென்னை, ஜூலை,22

சென்னை, எழும்பூர், இராஜரத்தினம் ஸ்டேடியத்தில் வன்னியர் மக்கள் கட்சி சார்பில் மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வன்னியர் மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் நா.சக்திபடையாட்சி தலைமையில் நடைபெற்ற இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை அனைத்து இந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சி மற்றும் வன்னியர் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சி.என். இராமமூர்த்தி தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில், மாநில அமைப்புச் செயலாளர்கள் தீபம் பா.சண்முகம் பெ.வித்யாரண்யன், மாநில பொதுச் செயலாளர் எம். சீனிவாசன் , மாநில இணைப் பொதுச் செயலாளர்கள் செஞ்சி இ.ராஜா , எம்.சம்பத் , மாநிலத் துணைத் தலைவர் ஆர்.சி.ராமலிங்கம் , மாநில பொருளாளர் வழக்கறிஞர் டி.கோவிந்தராஜ் ஆகியோர் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர். அப்போது பேசிய சி.என்.ராமமூர்த்தி தனது உரையில்...

வன்னியர்களுக்கு மட்டுமே சொந்தமான ஆயிரம் காணி ஆளவந்தார் விட்டுச்சென்ற சுமார் 1500 ஏக்கருக்கும் அதிகமான நிலத்தின் ஒரு பகுதியை தமிழக அரசின் இந்து அறநிலையத்துறை தன்னிச்சையாக, வன்னியர் பொது சொத்து நல வாரியத்தின் அனுமதி இல்லாமல் திரைப்பட தொழிலுக்கு ஏலம் விட முடிவு செய்ததை கண்டித்து தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் பொருட்டு இந்த மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. வன்னியரின் சொத்துக்கள் வன்னியர்களுக்கே, அன்னியருக்கு இல்லை" என்று கூறினார்.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் வன்னியர் ஜனநாயக பேரவை நிறுவனர் கவிஞர் ந.வ.கணேசன், சாம்ராஜ்யத்தின் தலைவர் சி.ஆர்.ராஜன், வன்னிய குல சத்திரிய சமூக சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்த டாக்டர் தமிழரசன், மூத்த பத்திரிகையாளர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சீர்காழி அருகே பத்திரகாளியம்மன் கோயிலில் 300க்கும் மேற்பட்ட பெண்கள் பால்குடம் எடுத்து வழிபாடு



சீர்காழி, ஜூலை,22

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே விளந்திடசமுத்திம் பகுதியில் பத்ரகாளியம்மன் கோவிலில் ஆடி மாதம் 10 நாட்கள் உற்சவம் நடைபெறுவது வழக்கம். கடந்த 12-ம் தேதி காப்பு கட்டி உற்சவம் தொடங்கியது.

விழாவின் முக்கிய நிகழ்வாக நேற்று தீமிதி உற்சவம் நடைபெற்றது. இதனை முன்னிட்டு சீர்காழி மணிகூண்டு மங்கையர்க்கரசி விநாயகர் கோயிலில் இருந்து 300-க்கும் மேற்பட்ட பெண்கள் பால்குடங்கள் எடுத்து ஊர்வலமாக சென்றனர்.

அலகு காவடி, பறவை காவடிகள் எடுத்து பக்தர்கள் முக்கிய வீதிகளின் வழியாக கோயிலை சென்றடைந்து நேர்த்திக்கடன் செலுத்தினர். தொடர்ந்து கோயிலில் பத்திரகாளியம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு அலங்காரம் தீபாராதனை காட்டப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

# காரைக்கால் கருமாதி மண்டப சுற்றுச்சுவரை கட்டி தர வேண்டும்

## கலெக்டரிடம் பொதுமக்கள் நேரில் மனு





காரைக்கால், ஜூலை.22

காரைக்கால் மாவட்ட காரைக்கால் தலித் பழங்குடியின அமைப்புகளின் கூட்டமைப்பினர் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர். மனுவில் கூறியிருப்பதாவது:-

காரைக்கால் நகரத்திற்கு உட்பட்ட திருநகர், பெரிய பேட் கல்லறைப் பேட், பறவை பேட். எம்ஜிஆர் முல்லை நகர் ஆகிய ஆறு கிராமத்தைச் சேர்ந்த தலித் மக்கள் பயன்படுத்திவரும் கருமாதி மண்டபம் காரைக்கால் இசிஆர் சாலையில் உள்ளது.

இம்மண்டபத்திற்கு சுற்றுச்சுவர் கட்டித் தரவும் மண்டபத்தை புதுப்பித்து தரவும் அப்பகுதி மக்களால் அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில்புதுச்சேரி அரசு காரைக்கால் நகராட்சியின் மூலமாக 4 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

இதை எதிர்த்து காரைக்காலை சேர்ந்த சவுதா சின்னத்தம்பிதனது வீட்டுமனைகள் மற்றும் தனது அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இடையூறாக தலித மக்களின் கருமாதி மண்டபம் உள்ளது என்று காரைக்கால் நகராட்சியை எதிர்த்து நீதிமன்றத்தில் தடையாணை பெற மனு தாக்கல் செய்தார்.

நீதிமன்றம் அவருக்கு தடையாணை மறுத்து அவ்விடத்தில் கருமாதி மண்டப சுற்று சுவர் எழுப்ப நகராட்சிக்கு தடையில்லை என்று தீர்ப்பளித்தது. மேலும் சௌதா சின்னத்தம்பி பலவழிகளில் கருமாதி மண்டப சுற்றுச்சுவர் எழுப்புவதை தடுத்தே வந்துள்ளார். இதை எதிர்த்து மேற்படி தலித் கிராம மக்கள் மற்றும் தலித் அமைப்புகள் சேர்ந்து கருமாதி மண்டப சுற்றுச்சுவர் எழுப்பிட வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். இப்பொழுது மேற்படி கருமாதி மண்டபம் கட்டுவதற்கு சற்றே ஏறக்குறைய 8 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யபட்டு உள்ளது.

பொன்னமராவதி அருகே ஒலியமங்கலம் கிராமத்தில்

# அனைத்திந்திய விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் சங்க பொதுக்கூட்டம்

பொன்னமராவதி, ஜூலை.22-

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி அருகே உள்ள ஒலியமங்கலம் கிராமத்தில் அனைத்திந்திய விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் சங்க பொதுக்கூட்டம் மற்றும் ஐந்தாம் ஆண்டு பாரம்பரிய விதைகள் பரிமாற்ற கூட்டம் நடைபெற்றது. இதில் அனைத்திந்திய விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் சங்க நிறுவன தலைவர் ஜி.கே.விவசாயமணி என்ற ஜி சுப்பிரமணி ஆணைக்கிணங்க ஒலியமங்கலம் ரெ. முத்துச்சாமி மாநில இயற்கை வேளாண்மை பிரிவு தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் தங்கராசு மாநில அமைப்பு செயலாளர் வரவேற்புரை ஆற்றினார், இதில் பாரம்பரிய நெல் விதைகளான பாஸ்மதி, சீரகச் சம்பா, கருப்பு கவுனி ஆத்தூர் கிச்சடி சம்பா குளவாலை உள்ளிட்ட பாரம்பரிய நெல் விதைகளை பரிமாறிக் கொண்டனர். மேலும் இந்த விவசாயிகள் பாரம்பரிய விதைகளை பரிமாற்ற கூட்டத்தில் பெறக்கூடிய விதை நெல்களுக்கு பணம் ஏதும் வாங்கப்படாமல், இந்த வருடம் தங்கள் வாங்கக்கூடிய விதை நெல்லுக்கு ரசாயனம் ஏதும் பயன்படுத்தாமல் விவசாயம் செய்து அதற்கு ஒரு மடங்கு சேர்த்து



தங்களின் விதை நெல்லை இங்கு வழங்க வேண்டும் என்ற உள்ளிட்ட நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டது.

மேலும் இக்கூட்டத்தில் பள்ளி பாடப்பகுதியில் 1 முதல் 12 வகுப்புகள் வரை அனைத்து வகுப்புகளிலும் அறிவியல் பாடத் திட்டத்தில் இயற்கை வேளாண்மை குறித்து பாடங்கள் அமைய வேண்டும். பிளாஸ்டிக் தடை அமுலில் இருந்தும் இன்னும் பயன்பாட்டில் உள்ள பிளாஸ்டிக் உபயோகத்தையும் முழுவதுமாக தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கண்மாய் மற்றும் காடு வளர்ப்பு திட்டத்தில் இலுப்பை வேம்பு பொங்கு மற்றும் தேத்தான் மரங்களை நடவு செய்ய வேண்டும் ஒரு கிலோமீட்டர் சுற்றளவில் எவ்வளவு மரங்கள் இருக்க வேண்டும் என்பதை துல்லியமாக கணக்கெடுத்து அதன் அடிப்படையில் பாரம்பரிய மரக்கன்றுகளை நடவு செய்ய வேண்டும்.

இயற்கை விவசாயத்திற்கு தேவையான இடுபொருட்களை மானிய விலையில் வழங்க வழிவகை செய்ய வேண்டும்.

உற்பத்தி செய்யப்படும் அனைத்து வேளாண்மை பொருட்களும் குறைந்தபட்ச ஆதார விலையை கொடுத்து அரசே கொள்முதல் செய்ய வேண்டும். மண்வளத்தை பாதிக்கும் ப்ளீச்சிங் பவுடர் கிருமி நாசினி பயன்படுத்துவதற்கு பதிலாக வேப்ப இலையை பவுடர் ஆக்கி பயன்படுத்தவும் மற்றும் குடிநீரில் பிளீச்சிங் பவுடரை பயன்படுத்துவதற்கு பதிலாக தேத்தான் கொட்டை தூளை பயன்படுத்த அரசு முன்வர வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த விதை நெல் பரிமாற்ற கூட்டம் நடைபெற்றது.

இந்த விழாவில் அனைத்திந்திய விவசாயம் மற்றும் தொழிலாளர்கள் சங்க நிர்வாகிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள், சாலைப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் மேயர் பிரியா அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை.22-

சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள், சாலைப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று மாநகராட்சி மேயர் பிரியா அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், சாலைப்பணிகள் உள்ளிட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மேயர் பிரியா தலைமையில் நேற்று ரிப்பன் மாளிகை வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மேயர் பேசுகையில், "சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொசஸ்தலையாறு வடிநில திட்டம், கோவளம் வடிநில திட்டம், உலக வங்கி நிதி, வெள்ளத் தடுப்பு நிதி, சிங்கார சென்னை 2.0 திட்டம், மூலதன நிதி உள்ளிட்ட பல்வேறு நிதிகளின்கீழ் 1,223 கி.மீ.நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் ரூ.2,325 கோடி செலவில் 727 கி.மீ. நீளத்துக்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.




மீதமுள்ள இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் பருவமழை தொடங்குவதற்கு முன் விரைந்து முடிக்க வேண்டும். விடுபட்ட மழைநீர் வடிகால் இணைப்புப் பணிகளை உடனடியாக மேற்கொண்டு முடித்திட வேண்டும்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்களில் வண்டல் மற்றும் கழிவுகளை அகற்றி தூர் வாரும் பணிகளை மேற்கொள்ளவும், வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் உள்ள அடைப்புகளை நீக்கி மழைநீர் எளிதில் செல்லும் வகையில் சீர்செய்யவும், மழைநீர் வடிகால் பணிகள் முடிவுற்ற இடங்களில் உடனடியாக சாலைப் பணிகளை தரமாகவும் விரைவாகவும் மேற்கொள்ள வேண்டும்.

சென்னை மாநகராட்சியில் 2023-24ம் நிதியாண்டில் ரூ.433.28 கோடி மதிப்பீட்டில் 3,676 எண்ணிக்கையிலான 645.60 கி.மீ. நீளமுடைய சாலைப் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தங்கள் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பிற துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் முடிந்த உடன் அவ்விடங்களில் மாநகராட்சியின் சார்பில் உடனடியாக சாலைப் பணிகளை அமைத்திடவும், ஒப்பந்ததாரர்கள் சாலைப் பணிகள் மேற்கொள்ளும் பொழுது, போடப்படும் சாலைகளின் தரம் மற்றும் உறுதித் தன்மை ஆகியவற்றை கண்காணித்து பணிகளை விரைந்து முடித்திட வேண்டும்." என்றார்.



► சென்னை, தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தலைமையில், ஹாக்கி இந்தியா மற்றும் தமிழ்நாடு அரசு இணைந்து, ஆகஸ்ட் 3ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை சென்னையில் நடத்தும் 7ஆவது ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப்-2023 கோப்பை போட்டிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து அரசு உயர் அலுவலர்கள் மற்றும் ஹாக்கி இந்தியா நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.





► தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தலைமையில் மாநில சாலைப் பாதுகாப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



► பாரத் அறிவியல் மற்றும் நிர்வாகவியல் கல்லூரியின் நாட்டு நலப் பணி திட்டம் சார்பில் கல்லூரி வளாகத்தில் மாவட்ட தீயணைப்பு மற்றும்மீட்ப்பு பணிகள் துறை அதிகாரிகள் தீயை பற்றிய விழிப்புணர்வுகளை மிகவும் சிறப்பான முறையில் மாணவர்களுக்கு செயல்முறை மூலம் செய்து காண்பித்தனர். கல்லூரி செயலாளர் புனித கணேசன் தலைமையில், கல்லூரி இயக்குனர் மற்றும் முதல்வர் முன்னிலையில் இந்ததீயை பற்றிய விழிப்புணர்வுசெயல்முறை விளக்கம் நடத்தபட்டது. இதற்கான ஏற்பாடுகளைநாட்டு நலப்பணி திட்ட அலுவலர்கள் பேராசிரியர்கள்ராஜேஷ், க முருகானந்தம், ஜெயராம், மற்றும் திவ்வியதர்ஷனி ஆகியோர் சிறப்பான முறையில் செய்திரிந்தினர்.



► புதுக்கோட்டை ஊராட்சிஒன்றியம் 2022-23 ஆம் ஆண்டுகளில் கிராம ஊராட்சி பகுதிகளில் அமைந்துள்ள அரசு தொடக்க பள்ளிகளில் சமையல் கூடம் கட்டும் பணிகளை திட்ட அலுவலர் நா. கவிதப்பிரியா, வடவாளம் ஊராட்சி இச்சடி, ஆதனக்கோட்டை ஊராட்சி ஆதனக்கோட்டை, பெருங்களூர் ஊராட்சி மேட்டுப்பட்டி, செம்பாட்டூர் ஊராட்சி தண்ணீர்பந்தல்பட்டி, வாகவாசல் ஊராட்சி விஸ்வாகர்மா நகர், தொண்டைமான் ஊரணி ஊராட்சி தொண்டைமான் ஊரணி மேற்காணும் ஊராட்களில் உள்ள அரசு தொடக்க பள்ளிகளில் சமையல் கூடம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதை நேரில் தல பார்வை செய்து பணிகளை விரைந்து முடிக்கவும், தரமாக முடிக்கவும் நேரில் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்நிகழ்வுகளில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குமார வேலன், ரவிச்சந்திரன், உதவிப்பொறியாளர்கள் கண்ணாகி, சுமதி, ஒன்றிய பணி மேற்பார்வையாளர்கள் இளங்கோ தொடர்புடைய ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆதனக்கோட்டை கண்ணன், பெருங்களூர் சரண்யா ஜெய்சங்கர், செம்பாட்டும் மாணிக்கம், வாகவாசல் மஞ்சுளா முத்தையா, வடவாளம் அருள்சிறுமலர் ஞானப்பிரகாசம் தாமரைச்செல்வி ராமதாஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



► புதுக்கோட்டை மாவட்ட நடிகர் திலகம் சிவாஜி சமூக நலப் பேரவைத் தலைவர் சுப்பையா தலைமையில் மச்சுவாடியில் நடைபெற்றது நிகழ்ச்சியில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, புதுக்கோட்டை நகர் மன்றத் தலைவர் திலகவதி செந்தில், நகர் மன்றத் துணைத் தலைவர் லியாகத் அலி, சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத் தலைவர் கண.மோகன் ராஜா 10வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் மை.பால்ராஜ் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிவாஜி கணேசன் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர், முன்னதாக வருகை தந்த அனைவரையும் சிவாஜி சமூக நலப் பேரவை நகரத் தலைவரும், புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கத்தின் தலைவருமான அசோகன் வரவேற்றார், நிகழ்ச்சியில் புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கச் செயலாளர் முத்தன் அரசகுமார், பொருளாளர் சங்கர், புதுகை புதல்வன். பீர் முகமது மற்றும் சிவாஜி சமூகநல பேரவை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டையில் ஆறாவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவிற்கான ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

கந்தர்வக்கோட்டை ஜூலை, 22-

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இணைந்து நடத்தும் ஆறாவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவிற்கான கந்தர்வகோட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னதுரை தலைமை வகித்தார், அனைவரையும் அறிவியல் இயக்க மாவட்ட இணை செயலாளர் கு.துரையரசன் வரவேற்றார், கடந்த ஆண்டு செய்த பணிகளையும் இந்த ஆண்டு நம் ஒன்றியத்தில் இருந்து அனைவரையும் கலந்து கொள்ள செய்ய வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது இவ்வாண்டு அனைத்து பள்ளி கல்லூரிகளையும் ஒருங்கிணைத்து 10 நாள் சிறப்பாக பங்கேற்பது சார்ந்து கல்வி அலுவலர்களுடன்



இணைந்து திட்டமிட்டு ஒரு கிராமப்புற பள்ளிகளையும் விட்டுவிடாமல், அனைவரும் கலந்துகொள்ளும் வகையில் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்றும் இதற்கு அனைத்து துறை அலுவலர்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதில் அறிவியல் இயக்க புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் மு.முத்துக்குமார், கந்தர்வகோட்டை ஒன்றிய பெருந்தலைவர் கார்த்திக் என்ற ரெத்தினவேல், வட்டாட்சியர் கே.காமராஜ், துணை வட்டாட்சியர் பாலகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் பால் பிரான்சிஸ், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பார்த்திபன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் குமார், காவல்துறை அலுவலர்கள் தீன தயாளன், ராஜ தயாளன், வட்டார வள மைய மேற்பார்வையார் பொ பிரகாஷ், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பொ சசிக்குமார், ஆசிரியர் ஜெயகுமார் நிகழ்வுகளை அறிவியல் இயக்க வட்டாரத் தலைவர் அ.ரகமதுல்லா ஒருங்கிணைத்தார், முன்னதாக அனைவரையும் அறிவியல் இயக்க வட்டார செயலாளர் எம்.சின்னராசா வரவேற்றார் சமூக ஆர்வலர்கள் ராமையன், இளையராஜா, விக்கி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர், நிறைவாக அறிவியல் வட்டார துணைத்தலைவர் எம். சண்முகம் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# பொன்னமராவதியில் நேரு யுவகேந்திரா சார்பில் மழை நீர் சேகரித்தல் விழிப்புணர்வு

**பொன்னமராவதி, ஜூலை.22-**

மத்திய அரசின் நீர்வள அமைச்சகம் மற்றும் நேரு யுவகேந்திரா சங்கதன் ஆகியவை இணைந்து மழை நீரை சேகரித்தலின் அவசியம் குறித்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நாடு முழுவதும் நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக மழை நீரை சேகரித்தல் மற்றும் சிக்கனமாக பயன்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி புதுக்கோட்டை மாவட்ட நேரு யுவகேந்திரா சார்பில் நேற்று பொன்னமராவதி வலம்புரி வடுகநாதன் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் நாட்டு நலப்பணி திட்டம் பசுமை படை போன்ற அமைப்புகளை சார்ந்த சுமார் 200 மாணவ மாணவியர் பங்கேற்றனர்.



நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் (பொறுப்பு) கணேசன் தலைமை வகித்தார். பொன்னமராவதி காவல் ஆய்வாளர் ரமேஷ், பொன்னமராவதி பேரூராட்சி செயல் அலுவலர் கணேசன் ஆகியோர் மழை நீரை சேகரித்தலின் அவசியம் குறித்து சிறப்புரை ஆற்றினர். பிரபஞ்சம் வளர்ச்சி அறக்கட்டளை மேலாண்மை அறங்காவலர் நாராயணசாமி ராஜுவாழ்த்துரை வழங்கினார்.

நிறைவாக நேரு யுவ கேந்திராவின் தேசிய இளையோர் தொண்டர் கருப்பையா அனைவருக்கும் நன்றி கூறினார். நிகழ்ச்சியினை பிரபஞ்சம் வளர்ச்சி அறக்கட்டளை மற்றும் பொன்னமராவதி பிரபஞ்சம் இளையோர் நற்பணி மன்றத்தினர் ஆகியோர் இணைந்து சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# வாசனின் வளர்ச்சி பொறுக்காமல் ஈவிகேஎஸ் உளறுகிறார் தமாகா கண்டனம்

சென்னை, ஜூலை.22-

"தமாகா தலைவர் வாசன், உலகமே போற்றும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நிகராக அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதை ஈ.வி. கே.எஸ். இளங்கோவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதன் வெளிப்பாடுதான் அவரை இப்படி உளற வைக்கிறது" என்று அக்கட்சியின் இளைஞரணி தலைவர் யுவராஜா கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: “இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்து விடல்”என்ற வான் புகழ் கொண்ட வள்ளுவனின் வாக்கிற்கேறப வாழ்பவர் ஜி.கே வாசன். ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் கடந்த கால அரசியல் வரலாறு தடுமாற்றம் நிரம்பிய தடைபட்ட அரசியல் பயணம். எங்கும் எதிலும் எப்போதும் நிலைத்ததும் இல்லை நின்று பேசியதும் இல்லை. தனக்கு வாயில் வந்ததை பேசிவிட்டு தவறாக பேசிவிட்டோம் என்று மன்னிப்பு கேட்கும் பழக்கம் அவருக்கு அரசியல் வழக்கமாக உள்ளது.

நீங்கள் 1988-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிய, நடிகர் சிவாஜி கணேசனுக்கு ஆதரவு தந்து காங்கிரஸ் வேட்பாளரை வென்று சட்டமன்றத்தில் நுழைந்தீர்கள். தங்களின் நடவடிக்கையால் அப்போதைய சபாநாயகர் பி.ஹெச்.பாண்டியனால் சபையை விட்டே ஓரம்கட்டப்பட்டீர்கள். பிறகு சிவாஜி, உங்களால் அதலபாதாளத்துக்கு சென்றதை நாடே அறியும். 2000-ம் ஆண்டு அகில இந்திய காங்கிரஸ் தலைமை தங்களை அங்கீகரிக்காத காலத்தில் மறைந்த சுலோச்சனா சம்பத்தின் வேண்டுகோளுக்கு இணங்க தமிழக காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக தங்களை நியமிக்க சோனியாவிடம் பேசி பெற்றுத்தந்த தலைவர் மூப்பனார் என்பதை நீங்களும் மறந்து விட்டீர்கள், உங்கள் நாக்கும் மறந்துவிட்டது.

2001-ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி சேர தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் உதவியை நாடியதை மறந்துவிட்டு பேசுவதா? 2004-ம் ஆண்டு நீங்கள் போட்டியிட்டபோது வாசன் பிரச்சாரம் மேற்கொண்டு உங்களுக்காக வாக்கு சேகரித்தபோது கை கூப்பி வாசனின் பின்புறம் நின்றதை மறந்துவிட்டு பேசுவதா?

2009-ல் இருந்து 2014 உங்களுடைய தோல்விக்கு பிறகு மத்திய அமைச்சராக





இருந்த ஜி.கே வாசன், தமிழகம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள செல்லும்போது தங்களையும் உடன் அழைத்து சென்று தங்களை காரின் முன் இருக்கையில் அமரவைத்து அழைத்து சென்றதையும், நிகழ்ச்சியில் அவருடன் தாங்கள் பங்கேற்கும் போது பத்திரிக்கையாளர்களே தங்களுடைய பெயரை போடத்தயங்கிய தருணத்தில், தங்களையும் முன்னிறுத்தி அழகு பார்த்த பெருமை தலைவர் வாசன் என்பதை மறந்துவிட்டீர்களா?

2014-ம் ஆண்டில் ஜி.கே வாசன், அவரது வீட்டில் பத்திரிக்கையாளர்களை சந்தித்துக் கொண்டிருந்தபோதே எங்கு நீங்கள் தமிழ் மாநில காங்கிரஸில் ஐக்கியமாகி விடுவீர்களோ, என்று காங்கிரஸ் தலைவர் பதவியை சோனியா காந்தி கொடுத்தபோது அதை எங்கள் தலைவர் வாழ்த்தி வழி அனுப்பி வைத்ததை இப்போது நினைவு கூற விரும்புகிறேன். நீங்கள் பங்கேற்ற அனைத்து தேர்தல்களிலும், வாசன் தேர்தல் பிரச்சாரம் செய்து உங்கள் வெற்றிக்கு வழி வகுத்ததை இன்று நினைவுகூற விரும்புகிறேன்.

2017-ல் உடல் நிலையை காரணம் காட்டி ஒரு முதிர்ந்த அரசியல்வாதியாகிய உங்களை எப்படி தலைவர் பதவியை விட்டு நீக்கினார்கள் என்பது உங்கள் மனசாட்சிக்கு தெரியும். அனால் இன்று தமாகா தலைவர் வாசன், உலகமே போற்றும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நிகராக அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதை உங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதன் வெளிப்பாடுதான் உங்களை இப்படி உளற வைக்கிறது. தங்கள் தொகுதிக்கு அருகிலேயே பல்லாயிரம் பேர் கூடிய பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தை பார்க்காத நீங்கள் எப்படி தொகுதியில் மக்கள் படும் துயரங்களைப் பார்க்க முடியும். நாட்டு மக்களுக்கு தாங்கள் எப்படிப்பட்டவர் என்பது நன்கு தெரியும்.

தங்கள் உடல் நிலையை கருத்தில் கொண்டு இனியாவது இது போன்ற தரம் தாழ்ந்த செயல்களை செய்யாமல் உடல் நிலையை நன்கு கவனித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துகிறேன். நிலை தடுமாறி செய்தியாளர்களிடம் பேசிய காரணத்தால் என்ன சொல்லுகிறோம் என்று தெரியாமலே உளறி கொட்டி இருக்கிறீர்கள். இந்த உளறலே கடைசியாக இருக்கட்டும். இனியும் தமாகா தலைவர் வாசன் பற்றி பேசுவதை ஈ.வி. கே.எஸ். இளங்கோவன் நிறுத்திக் கொள்ள வேண்டும். இனியாவது தங்கள் வயதிற்கேற்ப மரியாதையோடும், பண்போடும் பேசுவதற்கு கற்றுக் கொள்ள வேண்டும்" என்று அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, அண்மையில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்எல்ஏ ஈ.வி. கே.எஸ்.இளங்கோவன், "காங்கிரஸ் கட்சியும் அதன் தோழமை கட்சிகளும் பெங்களூரில் கூட்டம் நடத்தினர். இதைப்பார்த்து, பாஜகவும் அதன் கூட்டணி கட்சிகளும் கூட்டம் நடத்தியுள்ளனர். இந்த கூட்டத்தில் இருப்பவர்கள் யார் என்று பார்த்தால், தொண்டனாகவும் தலைவராகவும் இருக்கும் ஜி.கே.வாசன் போன்றவர்கள்தான்" என்று கூறியிருந்தார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# செந்தில்பாலாஜி எந்த சட்டப் பிரிவின் கீழ் தகுதி இழப்பு ஆகிறார்? உச்ச நீதிமன்றம்

# மணிப்பூர் கொடூரம்: தேசிய மகளிர் ஆணையம் களத்தில் இறங்கியது





# வாசனின் வளர்ச்சி பொறுக்காமல் ஈவிகேஎஸ் உளறுகிறார் தமாகா காட்டம்


சென்னை / புதுக்கோட்டை | 22.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

தொ. மு. பாஸ்கர தொண்டைமான் , தமிழறிஞர், எழுத்தாளர் (பி.1904) (இ.1965)



வாணிதாசன் , புதுவைக் கவிஞர் (பி.1915) (இ.1974)



எஸ். டி. சுந்தரம் , தமிழக எழுத்தாளர், நாடகாசிரியர், நடிகர் (பி.1921) (இ.1979)



## இன்றைய நினைவு நாள்

முத்துலட்சுமி ரெட்டி , இந்தியாவின் முன்னோடிப் பெண் மருத்துவர் (பி.1886) (இ.1968)



சிவகுமார் ராய் , இந்திய எழுத்தாளர் (பி.1919) (இ.1995)



நாரண. துரைக்கண்ணன் , தமிழக்ப் பத்திரிகையாளர், எழுத்தாளர் (பி.1906) (இ.1996)



## பை நாள்